**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**

**SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**CC.86/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | நாகவள்ளி | Prosecution | LW-1 as PW-1 |
| Father Name | க/பெ. தினேஷ் | Defence | |
| Village | வைத்தீஸ்வரன் கோயில் | Taluk | Sirkali |
| Calling | | Age | 23/2025 |

Solemnly affirmed by Tmt.R.Geetha Grade III Bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day
03.06.2025. சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

**1.** நான் மேற்படி முகவரியில் வசித்து வீட்டு குடுத்தனம் செய்து வருகிறேன். கடந்த 24.10.2021 தேதியன்று என் கணவர் தினேஷ் என்பவர் வைத்தீஸ்வரன் கோவிலில் இருந்து சீர்காழிக்கு டெம்போ வாகனத்தில் வந்து கொண்டிருந்தபோது, கைகாட்டி பகுதி அருகே அன்னபூர்ணா ஹோட்டல் எதிரில், அவர் வந்து கொண்டிருந்தபோது அவர் வண்டிக்கு எதிர்ப்புறம் வாகனம் வந்ததால் திடீரென பிரேக் பிடித்து அதனால் என் கணவருக்கு தலையில் அடிபட்டு விட்டது. உடனே அங்கு கூடியிருந்த மக்கள் அவரை சீர்காழி அரசு மருத்துவமனையில் மேற்படி விபத்து பற்றி ராஜேந்திரன் என்பவர் என்னிடம் தொலைபேசி மூலமாக தகவல் சொன்னார்.

2. நான் மறுநாள் காலை என் கணவரை மருத்துவமனைக்கு சென்று சந்தித்தேன். அங்கு உடல்நலம் தேரிய உடன் அவரை எங்கள் வீட்டுக்கு அழைத்து வந்தோம். ஆனால் ஓரிரு நாட்களில் அவரது உடல் நலம் குன்றிவிட்டது. ஆகவே அவரை மீண்டும் மேற்படி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். அவர்கள் அவரை சிதம்பரத்திற்கு அழைத்துச் செல்லுமாறு கூறினார்கள். அவ்வாறு ஆம்புலன்சில் என் கணவரை ஏற்றிய போது அவரது உயிர் பிரிந்து விட்டது. மேற்படி சாலை விபத்து சம்பந்தமாக நான் சீர்காழி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் நான் காவல் நிலையத்தில் கொடுத்த புகாராகும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் செய்திகளை நான்

சொல்ல சொல்ல போலீசார் எழுதிக் கொண்டனர். (அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது) இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. எனது கணவருடைய விபத்து சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அந்த விபத்து எப்படி ஏற்பட்டது மற்றும் யாரால் ஏற்பட்டது என்பதும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் விபத்தில் ஈடுபட்ட வாகனத்தின் எண் என்ன என்பதும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்திய வாகனம் எந்த திசையில் இருந்து எந்த திசையில் சென்று கொண்டிருந்தது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

2. நான் என் கணவருக்கு விபத்து ஏற்பட்டு இரண்டு நாட்கள் கழித்து தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அதுபோல விபத்து ஏற்பட்ட அன்று என் கணவரை மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அன்றைய தினமே நான் என் கணவரை வீட்டிற்கு அழைத்துச் சென்று விட்டேன் என்றால் சரிதான். மேற்படி சம்பவம் பின்னிட்டு போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எதிரிக்கும் இந்த வழக்கறிக்கும் சம்பந்தமில்லை என்றாலும் நான் எனது கணவர் இறப்பிற்கு நஷ்ட ஈடு பெறுவதற்காக பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது**

**மறுவிசாரணைஇல்லை.**